# தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை

## பதவி வெற்றிடங்கள்

தேசிய மருந்துகள் ஒழுங்குப்படுத்தல் அதிகார சபையின் பின்வரும் வெற்றிடங்களுக்கு தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யும் பதவிகளாகும் என்பதுடன் இடமாற்றங்கள் பெற முடியாதவையாகும். தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை கொழும்பில் மட்டுமே அமைந்துள்ளது என்பதுடன் வேறு கிளைகள் இல்லையென்பதால் இடமாற்றங்கள் அற்றதாகும்.

### 01. மருந்து பகுப்பாய்வாளர் (வெற்றிடங்களின் எண்ணிக்கை 15)

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் இரசாயனவியல் / நுண்ணுயிரியல் / மூலக்கூறு உரியியல் / உயிரியல் / உயிர் இராசாயனவியல் / மருந்தியல் / பௌதீகவியல் அல்லது பதவியுடன் தொடர்புடைய விடயத்துறையில் வேறு விஞ்ஞானமாணி பட்டமொன்று அல்லது மருந்தியலில் (B Pharm) பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

மற்றும்

மேற்கூறிய தகைமைகளைப் பெற்றுக்கொண்டதன் பின் அரசாங்கம், அரசாங்கக் கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் பதவியுடன் தொடர்புடைய விடயத்துறையில் ஒரு (01) வருட கால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. ''கனிஷ்ட முகாமைத்துவ'' (JM 1-1)சேவை வகுதியில் உதவி மருந்து பகுப்பாய்வாளர் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயது:** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**பதவிக்குரித்தான சம்பள நிலை :** 02/2016ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் MM 1-1 ரூபா (53,175 – 10x1,375 – 15x1,910 – 95,575/-) சம்பள அளவில் ஆரம்ப நிலையான 53,175/- ரூபா மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்.

**ஆட்சேர்க்கப்படும் முறை :** திறந்த போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

### 02. உதவி மருந்து பகுப்பாய்வாளர் (வெற்றிடங்களின் எண்ணிக்கை 25)

**தகைமைகள்:**

வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2)

1. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் இரசாயனவியல் / நுண்ணுயிரியல் / மூலக்கூறு உரியியல் / உயிரியல் / உயிர் இராசாயனவியல் / மருந்தியல் / பௌதீகவியல் அல்லது பதவியுடன் தொடர்புடைய விடயத்துறையில் வேறு விஞ்ஞானமாணி பட்டமொன்று அல்லது மருந்தியல் இளமாணிப் (Bachelor of Pharmacy) பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.
2. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / தொழிற் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற் தகுதி (NVQ) ஆறாம் (06) நிலைக்குக் குறையாத நிலையில் இரசாயனவியல் / நுண்ணுயிரியல் / இரண்டாம் நிலை உயிரியல் / உயிரியல் / உயிர் இராசாயனவியல் / மருந்தியல் / பௌதீகவியல் போன்ற துறைகளில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

மற்றும்

மேற்கூறிய தகைமைகளைப் பெற்றுக்கொண்டதன் பின் அரசாங்கம், அரசாங்கக் கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் மருந்து பகுப்பாய்வு தொடர்பாக ஐந்து (05) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது:** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**பதவிக்குரித்தான சம்பள நிலை:** 02/2016ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் JM 1-1 ரூபா (42,600 - 10x755 - 18x1,135 - 70,580) சம்பள அளவில் 2020-01-01ஆம் திகதிக்கு உரித்தான சம்பள நிலை 42,600/- ரூபா மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்.

ஆட்சேர்க்கப்படும் முறை: எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

**ஏனைய விடயங்கள்:**

சகல விண்ணப்பதாரர்களும்:

i. இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
ii. பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதோடு நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
iii. சிறந்த நன்னடத்தையுடையவராகவிருத்தல் வேண்டும்.

- அரச, அரை அரச நிறுவனங்களில் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனத்தின் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2024-07-24ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் cv@nmra.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம் அல்லது பிரதான நிறைவேற்று அதிகாரி, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை, அரச பொறியியல் கூட்டுத்தாபனக் கட்டிடம், 02ஆம் தளம், இல. 130, W.A.D. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு-02 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். மின்னஞ்சல் மூலம் அனுப்பும்போது விடயமாக, தபாலில் அனுப்பும்போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்,**
**தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை.**

---

**தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை**
**.......................................... பதவிக்கான விண்ணப்பப்படிவம்**

1. பிரத்தியேக தகவல்கள்:
   1.1 முழுப் பெயர்:
   1.2. முதலெழுத்துகளுடன் பெயர்:
   1.3. பால்:
   1.4 பிறந்த திகதி:
   1.5. வயது வருடம்:.................. மாதம்:.................... திகதி:....................
   1.6. தேசிய அடையாள அட்டை இலக்கம்:
   1.7. தொலைபேசி இலக்கம்: நிலையானது........................... கையடக்க தொலைபேசி:...................
   1.8. மின்னஞ்சல் முகவரி:
   1.9 முகவரி:
   1.10 வசிக்கும் மாவட்டம்:
2. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்:
3. கல்வித் தகைமைகள்: (கூடிய தகைமையில் இருந்து வரிசைக் கிரமமாக குறிப்பிடவும்)

| தொ. இல. | தகைமைகள் | பல்கலைக்கழகம் / நிறுவனம் | நிறைவு செய்த திகதி / செல்லுபயாகும் திகதி | பாடம் / சித்தி |
|---|---|---|---|---|
| 01. | | | | |
| 02. | | | | |

4. தொழில்சார் தகைமைகள்:

| தொ. இல. | தகைமைகள் | பல்கலைக்கழகம் / நிறுவனம் | நிறைவு செய்த திகதி / செல்லுபயாகும் திகதி | பாடம் / சித்தி |
|---|---|---|---|---|
| 01. | | | | |
| 02. | | | | |

5. அனுபவம்: (தற்போது வகிக்கும் பதவி முதல் வரிசைக் கிரமமாக குறிப்பிடவும்)

| தொ. இல. | பதவி | நிறுவனம் | காலப்பகுதி |
|---|---|---|---|
| 01. | | | |
| 02. | | | |

6. விண்ணப்பதாரர் தொடர்பான தகவல்களை விசாரிக்கக்கூடிய உறவினரல்லாத இரு நபர்களின் பெயர் மற்றும் தொலைபேசி **இலக்கம் மற்றும் முகவரி:**
7. **விண்ணப்பதாரரின் சான்று:**

   இங்கு மேலே தரப்பட்டுள்ள என் தொடர்பான விபரங்கள் எனது அறிவு, விசுவாசத்தின் பிரகாரம் சரியானவை மற்றும் உண்மையானவை என பிரகடனப்படுத்துகின்றேன்.

   **திகதி:.**

   .......................................................................
   **(விண்ணப்பதாரியின் கையொப்பம்)**

8. அரச, அரச சார்புடைய நிறுவனங்களில் பணியில் உள்ள விண்ணப்பதாரர்களானால் நிறுவனத் தலைவரின் சான்று: இந்த விண்ணப்பதாரராகிய திரு/ திருமதி / செல்வி ........................................................................ தற்போது இந்த நிறுவனத்தில் ................................................ பதவியில் நிரந்தர / தற்காலிக / சமயாசமய பணியாளராக சேவையாற்றுகின்றார் என்பதுடன், அவர் இந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் என அறியத்தருகிறேன்.

   .......................................................................
   **நிறுவனத் தலைவரின் கையொப்பம்**
   **(உத்தியோகபூர்வ முத்திரை)**

---

**கவனிக்க வேண்டியது:**

இயைபுடைய மாதிரியின் பிரகாரம் மட்டுமே விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும் என்பதுடன் உங்களின் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை உறுதி செய்யும் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இந்த மாதிரியின் பிரகாரம் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள், முழுமையற்ற விண்ணப்பங்கள் அல்லது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளில் தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.